1971 மார்ச் 26] [திரு சொ. காவேறிமணியம்]

பெரும் பெரும் தொழிற்சாலைகள் அங்கு ஏற்படாத காரணத்தினால், மக்களுக்கு நல்ல பல வசதிகள் ஏற்படாத காரணத்தினால் அப்பகுதி மிகவும் பின்தங்கிக்கிடக்கிறது. ஆகவே, மதுரை மாநகராட்சியாகிற நேரத்தில் அதைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கு நல்லதொரு திட்டத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, சிறந்த முறையில் அமைந்திருக்கக்கூடிய இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையை வரவேற்று என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(எ) பேரவை அலுவல் குறித்து அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவுகள். பி.ப. 1–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு. 26–3–1971-ம் நாள் நடந்த அலுவல் ஆய்வுக்குழுவில் முடிவு செய்யப்பட்ட நடப்புக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலை இப்பொழுது பேரவைக்கு அறிவிக்கின்றேன்.

29–3–1971 (திங்கட்கிழமை)	..	(1) 1971–72-ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீது மேலும் விவாதமும், மேற்படி ஆண்டுக்கான முன் மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும்.
		(2) தமிழ் நாடு 1971–ம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக்கணக்கின்மீது வாக்கெடுப்பு) மசோதாவை அறிமுகம் செய்தல்.
		(3) 1970–71ம் ஆண்டுக்கான இறுதி துணை நிதி அறிக்கையின் மீது விவாதமும், வாக்கெடுப்பும்.
		(4) தமிழ் நாடு 1971–ம் ஆண்டு நிதி ஒதுக்க மசோதாவை அறிமுகம் செய்தல்.
30–3–1971 (செவ்வாய்க்கிழமை).	..	(1) நிதி ஒதுக்க மசோதாக்களை ஆய்வுக்கு எடுத்தலும், நிறைவேற்றலும்.
		(2) ஆளுநர் பேருரை மீது விவாதம்.
31–3–1971 (புதன்கிழமை).	..	ஆளுநர் பேருரை மீது விவாதம்.
1–4–1971 (வியாழக்கிழமை).	..	ஆளுநர் பேருரை மீது விவாதம்.
2–4–1971 (வெள்ளிக்கிழமை).	..	ஆளுநர் பேருரை மீது விவாதம் (கடைசி நாள்).
3–4–1971 (சனிக்கிழமை).	..	(1) அரசினர் மசோதாக்கள் :—
		1. தமிழ் நாடு 1971–ம் ஆண்டு குடிசைப் பகுதி (மேம்பாடு–மாற்று) மசோதா.

2. தமிழ் நாடு 1971-ம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகம் மசோதா.

3. தமிழ் நாடு 1971-ம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப்பாடு) திருத்த மசோதா.

4. 1971-ம் ஆண்டு மோட்டார் வண்டிகள் (தமிழ் நாடு திருத்த) மசோதா.

5. தமிழ் நாடு 1971-ம் ஆண்டு நகர-நாட்டுப்புற அமைப்பு மசோதா.

(2) அரசினர் தீர்மானம்.

பேரவை வழக்கம் போல் காலை 9 மணி முதல் பிற்பகல் 1-30 மணி வரை நடைபெறும்.

இத்துடன் பேரவையின் இன்றைய அலுவல்கள் முடிவுறுகின்றன. மீண்டும் 29—3—1971 (திங்கட்கிழமை) காலை 9 மணிக்குப் பேரவை கூடும்.

பி.ப. 1-32 *பின்னர், பேரவை ஒத்திவைக்கப்பட்டது.*

(7) பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

"Nil"

B. Reports, Notifications and Other Papers.

22. Demands for Grants for Further Expenditure and Detailed Supplementary Estimates thereof for the year 1970–71 (English and Tamil).

23. Notice of Demands for Grants for Further Expenditure in the year 1970–71 (English and Tamil).

24. Speech of Hon. the Chief Minister presenting the Final Supplementary Estimates for the year 1970–71. (English and Tamil).